# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# வெற்றிடம்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது, வர்த்தக அச்சிடல், பாதுகாப்பு அச்சிடல், வெளியீடு மற்றும் எழுதுபொருள் தயாரிப்புகள் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடும் நன்கு நிறுவப்பட்ட வருவாய் ஈட்டும் வர்த்தக நிறுவனம் என்பதோடு, சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்காக சிறந்த செயற்பாட்டு பதிவை பெற்ற சுறுசுறுப்பான மற்றும் முடிவுகளை நோக்கி செயற்படும் இலங்கையர் ஒருவரை தேடுகிறது.

**முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல்) (HM1-1) (பதவி 01)**

**பணி விபரம்**

சந்தைப்படுத்தல் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கும் அதேநேரம் சந்தைப்படுத்தல் பிரிவின் அனைத்து முகாமைத்துவ செயற்பாடுகளிலும், கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியின் விற்பனைகளை மேம்படுத்துவதற்கு பயனுள்ள மற்றும் திறமையான சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை செயற்படுத்துவதிலும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகள் உட்பட ஒட்டுமொத்த மேற்பார்வைக்கு பொறுப்பாவார்.

**தகைமைகள்**

***கல்வி (வெளிவாரி)***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணிப் பட்டம் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நிர்வாகத் துறையில் விரும்பத்தக்கது) மற்றும் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவத்துடன் பட்டப்பின் படிப்பு (முதுமாணி) தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் நிறுவன அங்கத்துவம்.

***(உள்ளக)***

பதவிக்காக நிறுவப்பட்ட தொடர்புடைய துறையில் முகாமைத்துவ பிரிவில் தரம் I இல் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

வயது வரம்பு: 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:**

2027.01.01 இல் இருந்து நடைமுறைக்கு வரும்

HM 1 – 1 - ரூபா 140,640/- 15 x 4,100 – 202,140/- (மாதாந்தம்)

2025.03.25 இன் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றுநிருபத்தின்படி

| HM 1 – 1 | | |
|---|---|---|
| 2025 | 2026 | 2027 |
| 105,399.00 | 123,019.000 | 140,640.00 |

**மற்ற நன்மைகள்**

- PED1/2015(ii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி போக்குவரத்துக் கொடுப்பனவுகள்

**சேவை நிபந்தனை:**

மேலுள்ள பதவி நிரந்தரமானது என்பதோடு 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக அமையும். ஏற்கனவே முன்னர் உறுதியை பெற்ற நிலையில் நியமிக்கப்படும் உள்ளக பணியாளர் ஓர் (01) ஆண்டு பதில் காலத்தை கொண்டதாக நியமனம் அமையும்.

**கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுகள் பொருந்தும்.

- சுற்றுநிருபங்களின்படி அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்
- வருகை ஊக்கத்தொகை
- உணவு கொடுப்பனவு

**மற்ற கூடுதல் நன்மைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய மருத்துவ திட்டம்.
- KPI அடிப்படையிலான ஊக்குவிப்பு முறை
- EPF மற்றும் ETF
- பயன்படுத்தப்படாத விடுப்பை பணமாக்கல்

**விண்ணப்பித்தல்:**

- 2025.06.14 ஆம் திகதிக்கு தொடர்புடைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தகைமைகளை நிரூபிக்க முடியுமானதாக கல்வித் தகைமைகள், தொழில்முறை தகைமைகள், வேலை அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் தமது விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மேலுள்ளவற்றுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச/ பொது நிறுவனம்/ கூட்டுத்தாபனம்/ சபைகளில் சேவையில் உள்ளவர்கள், குறித்த தமது நிறுவனத்தின் தலைவர் மூலம் தமது விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களையும் 2025.06.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு "தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும்.
- இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருந்தால், ஆட்சேர்ப்பு தொடர்பிலான குறித்த நிர்வாகத்தால் அந்த விடயம் தொடர்பில் தீர்மானிக்கப்படும். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக அமையும்.

**தலைவர்,**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ,**
**பாதுக்க .**

S P C